20.07.2026

அசல் வழக்கு எண் 42/2023

<u>வாசா.1 அன்பரசு குறுக்கு விசாரணை</u>

எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதி எங்களை தொந்தரவு செய்யக்கூடாது என்று கூறியுள்ளேன். தாவா சொத்து எனக்கு எப்படி பாத்தியம் என்றால் நான் தான் 20 வருடமாக அனுபவித்து வருகிறேன். தாவா சொத்து காலிமனையாக இருந்தது. அதை நான் அனுபவித்து வந்தேன்.

**2.** 2006ம் வருடத்திலிருந்து அனுபவித்து வருகிறேன் என்று பிராதில் கூறியுள்ளேன். ஆனால் வீட்டுவரி ரசீது 2008ம் ஆண்டு தான் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். 2006ம் வருடத்திற்கு முன்பு எங்கு வசித்து வந்தோம் என்றால் வேறொரு புறம்போக்கு மனையில் வசித்து வந்தோம். மின்சார இணைப்பு பெறுவதற்கு நான் எந்த ஆவணம் தாக்கல் செய்தேன் என்றால் தாவா

சொத்தின் வீட்டுவரி ரசீது வைத்து மின்சார இணைப்பு பெற்றேன்.

3. பிரதிவாதி எந்த வருடம் எனது மனைக்கு பக்கத்து மனையில் வீடு கட்டினார் என்றால் நான் கட்டி 6 மாதம் கழித்து அவர் கட்டினார். வருடம் ஞாபகம் இல்லை. தாவா சொத்தானது எனது பரம்பரை சொத்தா என்றால் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண் 157/9 ஏ 1 ஏ ஆகும். பழைய சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் வகைப்பாடு என்னவென்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி எப்போது அவர் மனையை வாங்கினார் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது.

4. வீடு கட்டியதற்கு அனுமதி பெற்றேனா என்றால் நான் ஓலை வீடு தான் கட்டியிருந்தேன். தாவா சொத்து சம்பந்தமாக பட்டா, சிட்டா மற்றும் வருவாய் துறை ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து சம்பந்தமாக வருவாய் துறை ஆவணங்கள் அனைத்தும் தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் எனது மனைவி பெயரில் உள்ளது. தாவா சொத்து சம்பந்தமாக வருவாய் ஆவணங்கள் ஏதேனும் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வீட்டுவரி ரசீது, மின்சார வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன்.

5. எனது மனைவி பெயரில் வருவாய் ஆவணங்கள் இருப்பதால் வழக்கு என் மனைவி தான் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்து தான் தாக்கல் செய்துள்ளோம். எனது மனைவி யாரிடமிருந்து தாவா சொத்தை பெற்றார் என்றால் நாங்கள் காலிமனையாக இருந்ததை தான் 20 வருடங்களாக அனுபவித்து வருகிறோம். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் எனக்கு தெரியாது.

6. மின்சார வாரியத்திற்கு மின்இணைப்பு வேண்டுமென்று மனு செய்த நகல் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எந்த வருடம் பிரதிவாதிக்கும் எங்களுக்கும் தகராறு ஏற்பட்டது என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு இரண்டு வருடத்திற்கு முன்பு பிரச்சனை ஏற்பட்டது. இதுசம்பந்தமாக படாளம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக

சொல்லியுள்ளேன். அந்த புகாரின் நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

7. எனக்கும் பிரதிவாதிக்கும் என்ன பிரச்சனை என்றால் தாவா சொத்து சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டது. எனது அப்பா பெயர் என்னவென்றால் குப்பன். அவர் எந்த வருடம் இறந்தார் என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்து எனது தம்பி பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தாகும். நான் எனது அப்பாவின் இறப்பிற்கு வந்து தாவா சொத்தில் குடிசை போட்டு சில நாட்கள் தங்குவதாக கூறி பின்பு பழைய வீட்டிற்கு சென்றுவிடுவேன் என்று கூறினேன், ஆனால் பலநாட்கள் ஆகியும் தாவா சொத்திலிருந்து போகாமல் பிரதிவாதியிடம் பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னை தாவா சொத்திலிருந்து செல்லுமாறு கூறியதால் இந்த வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும்.